Registered No. M. 5068

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஐப்பசி௴ 23௳ 8—11—1948 ஹிஜ்ரி 1368 மொஹரம்௴ 6௳ திங்கட்கிழமை. } இதழ் 39

பாஸிஸ்ட் ஜனநாயகம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்குமிடையே பிளவு அதிகரித்துக்கொண்டே வருகிறது. அதற்கு பொறுப்பு யாராகவிருப்பினும், நேற்றுவரை நண்பர்களாயிருந்தவர்கள் இன்று பகைவர்களாக மாறிவருவது மாத்திரம் உண்மை. பொறுப்பற்ற பேர்வழிகள், புரளிப் பத்திரிகைகள் ஒருபுறமிருக்க, பொறுப்புள்ள அரசியல் தலைவர்களும் கூட யுத்தப் பேச்சு பேசுகின்றனர். மேற்கு நாடுகள், அதிலும் குறிப்பாக பிரிட்டன் அமெரிக்கா தலைக்கு போர் ஆவேசம் ஏறியிருப்பதாகத் தெரிகிறது. யுத்த முஸ்தீப்புக்கள் நடக்கின்றன. நிர்மூல சக்தியைப் பெருக்குவதில் கோடிக்கணக்கான டாலர்கள் செலவழிக்கப்படுகின்றன வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகள் கிடைக்காமல் அவதிப்படும் உலகுக்கு துப்பாக்கிகள், பீரங்கிகள், அணுகுண்டுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதே போன்ற முஸ்தீப்பு ரஷ்யாவிலும் நடக்கிறதாவென்ற விஷயம் சரிவர தெரியவில்லை. ஆயினும் இவ்வளவு பெரிய அளவில் முஸ்தீப்புக்கள் செய்யவும், நாட்டின் உற்பத்திப் பெருக்கத்துக்கு மாறாக யுத்த சாதன உற்பத்தியில் தன் சக்தியைப் பெருமளவில் ஈடுபடுத்தவும், ரஷ்யாவால் முடியாதென்பது வெளிப்படை.

சென்றயுத்தத்தில் மற்றவர்களைவிட, மூன்று வருஷங்கள் வரை ஜெர்மன் தாக்குதல்களின் முழு வேகத்தையும் சமாளித்து நின்ற ரஷ்யாவுக்குத்தான் அதிக சேதம் ரஷ்ய சிப்பாய்கள் ஏராளமாய் கொல்லப்பட்டனர் தொழிற்சாலைகள், போக்குவரத்து ரஸ்தாக்கள், கட்டிடங்கள் தகர்ந்தன. இருதரப்பினரும் மாறி மாறி முன்னேறியதாலும் வாபஸானதாலும் பிரதேசங்கள் பாழடைந்தன. எஞ்சியிருந்ததை ரஷ்யர்களின் பொசுக்கல் கொள்கை சாப்பலாக்கிவிட்டது.

ரஷ்யாவைப்போல் பிரிட்டனுக்குச் சேதமில்லை. யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டனில் அமெரிக்க டாலர் மழை பெய்துங் கூட இன்னும் பழைய நிலைமையை அடைய பிரிட்டனால் முடியாமலேயே இருந்து வருகிறது. யுத்தம் முடிந்து மூன்று வருஷங்களாயின. நான்கு வருஷங்கள் வரை நாஜிகள் நிர்மூலம் செய்ததை மூன்று வருஷங்களில் நிர்மாணித்துவிட முடியுமென்று எண்ணிப்பார்க்கவும் முடியாது. என்னதான் பாடுபட்டாலும் ரஷ்யா பழைய நிலைமையை அடைய இன்னும் பத்துவருஷங்களாவது பிடிக்கும்.

சென்ற யுத்தத்தில் அமெரிக்காவுக்கு ஒன்றும் சேதமில்லை. எந்த ஒரு நகரமாவது குண்டு வீச்சுக்கு இலக்காகவில்லை. அதற்கு நேர்மாறாக ஏராளமாய் சம்பாதித்துவிட்டது அதன் தொழிற்சாலைகள் பெருகிவிட்டன, யுத்த தளவாட உற்பத்தி எல்லைமீறி அதிகரித்துவிட்டது. யுத்தம் முடிந்ததும் உற்பத்தியை செலவழிக்கும் பிரச்னை அமெரிக்க அரசாங்கத்தையும் முதலாளிகளையும் எதிர்நோக்கிற்று. தொழிற்சாலைகளை மூடினாலோ பொருளாதார பிரச்னையும் வேலையில்லா திண்டாட்டமும் ஏற்படுமென்ற அபாயம். ஆகையால் தங்கள் சுரண்டலை நீடித்து நடத்துவதற்காக அமெரிக்க முதலாளிகள் திரும்பவும் யுத்த பீதியைக் கிளப்பினார்கள். அதன் பயனாக உலக நாடுகள் அனைத்தும் யுத்தமுஸ்தீப்புகளில் முனைந்திருக்கின்றன. அவற்றின் கச்சாபொருள் உற்பத்திக்கும், தங்கத்துக்கும் பதிலாக அமெரிக்க தொழிற்சாலைகள் யுத்த தளவாடங்களை சப்ளை செய்கின்றன இவ்விதம் எதிர் நோக்கியிருந்த பொருளாதாரப் பிரச்னையும் அமெரிக்கா தற்காலீகமாய் சமாளித்துக் கொண்டிருக்கிறது.

சுதந்திரம் ஜனநாயகம் என்றுசொல்லிக் கொண்டுசுயகாரியங்களை நடத்துவது பொதுவாக சாம்ராஜ்ய வாதிகளின் வழக்கம். அவர்களுடைய சுதந்திர கூச்சல்களுக்கு பலஹீனர்களை அடிமைப்படுத்தி சுரண்டுவதென்பதே அர்த்தம். தங்களுடைய சுரண்டலில் மற்றவர்கள் தலையிடாமலிருக்க வேண்டுமென்றே அவர்கள் விரும்புகின்றனர். அதில் யாராவது தலையிடுவதாயிருந்தால் உடனே ஜனநாயக விரோதியென்று பிரகடனம் செய்து விடுகின்றனர். சென்ற யுத்தம் ஆரம்பித்ததற்கு இது தான் காரணம். ஏறக்குறைய அதே நிலைமைதான் இன்றைக்கும் இருந்துவருகிறது. சில இடங்களில் ரஷ்யா அக்கிரமம் செய்வதும், மற்றவர்களின் சுதந்திரத்தை பறிக்கப் பார்ப்பதும் ஹிட்லர், முஸோலினி போல் சாம்ராஜ்யக் கனவுகாண்பதும் உண்மையாகவிருக்கலாம். இருப்பினும் அதனுல் சுதந்திர ஜனநாயகக்கொடியை நிலைநாட்ட மேல்நாடுகள் பாடுபடுகின்றனவென்று ஏற்பட்டுவிட முடியாது.

சில சமயங்களில் தங்கள் லட்சியங்களுக்கு ஜனநாயக சாயம் பூசுவதில் மேல்நாடுகள் வெற்றியடைந்தும் விடுகின்றனவென்பது உண்மைதான். அதற்கு அவர்களுடை அந்தரங்க சுத்தி காரணமல்ல. ரஷ்யாவின் ஏதாவதொரு திமிர்பிடித்த தவரான செய்கையே தான் காரணம்.

துருக்கியை நெருக்குவதால் ரஷ்யாவின் சொரூபம் வெளிப்படுவது உண்மையாயினும் துருக்கிக்கு யுத்தசளவாடங்கள் கொடுத்துஉதவுவதன்மூலம் பிரிட்டனும் அமெரிகாவும் ஜனநாயகத்தை பாதுகாப்பதாக சொல்ல முடியாது. அதைவைத்துக் கொண்டு கிரீஸில் பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவம் இருந்துவருவது நியாயமென்று ஒப்புக்கொள்வதற்கில்லை மேல்நாடுகள் அந்தரங்கசுத்தியால் துருக்கிக்கு யுத்த தளவாடங்கள் கொடுக்கவில்லை. பிரிட்டனைப் போன்ற வல்லரசிடம் எட்டு லட்சம் ராணுவமிருக்க துருக்கி பட்டும் பத்து லட்சம் ராணுவத்தை வைத்துக்கெண்டிருக்கிறது. இல்லாவிட்டால் கிரீஸைப்போலவே துருக்கியிலும் ராணுவத்தைவைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். அந்நிலையில் மேல்நாடுகளுக்கு இதைவிட நூறு மடங்கு அதிகச் செலவு ஏற்படுமென்பது வெளிப்படை இன்று ராணுவச்செலவால் துருக்கியின் பொருளாதாரம் சீர்குலைந்து வருகிறது. ஜனநாயகத்தை பாதுகாப்பதே மேல்நாடுகளின் லட்சியமாக இருந்தால் யுத்த தளவாடங்கள் கொடுப்பதிற்குப்பதில் துருக்கிக்கு யுத்ததளவாட உற்பத்தி சாதனங்கள் கொடுத்திருக்கலாம். அதனுல் துருக்கியின் பொருளாதார நிலையும் மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்ந்திருக்க முடியும்.

டாலர் வலையில் சிக்கவைத்து உலகத்தையே அடிமைப் படுத்தும் முயற்சிகள் நடக்கின்றன. மலேயா, இந்தோசைனு, இந்தோனேஷியாவில் நடக்கும் ரத்தக்களரிக்குப் பிறகு மேல்நாடுகளை எப்படி நப்பமுடியும். இந்த கடைசி நேரத்தில்கூட அவற்றின் சுதந்திர உரிமைக்கு இணங்க மேல்நாடுகள் தயாராயில்லை பிரிட்டிஷ் ராணுவம் வெளியேற வேண்டுமென்ற எகிப்தின் கோரிக்கைக்கு, நிலைமை இன்னும் அனுமதிக்கவில்லை யென்று பதிலளிக்கப்படுகிறது சிறியநாடுகளின் சுதந்திரம் பெரிய நாடுகளின் நிலைமையைப்பொறுத்தே யிருக்கிறதுபோலும் நினைத்தபோது ராணுவத்தை இறக்குமதி செய்து தளங்களை அமைத்துக்கொள்ளும் உரிமை பெரிய நாடுகளுக்கு உண்டு யென்பதே இதற்கு அர்த்தம்.

இதற்கெல்லாம் வேண்டுமானுலும் சாக்குப் போக்குகளை சொல்லிவிடலாம், ஆனுல் ஹிட்லர், முஸோலினியின் கூட்டாளியும், வாரிசுமான பிராங்கோவுடன் சமரசம் செய்து கொள்வதற்கு அமெரிக்கா செய்து வரும் பஹிரங்க முயற்சிகளுக்கு என்ன சமாதானம் கூறமுடியும்? அதைப்பார்த்தபிறகு யாராவது தவருக நம்பிக்கொண்டிருக்க முடியுமா? பாஸீசமேஜனநாயகத்தின் முதல்தர எதிரி பாஸீஸத்தை முறியடிக்கவே யுத்தம் செய்வதாக சென்ற யுத்தத்தில் நேச நாடுகள் பறைசாற்றியும் வந்தன.

ஒரு பக்கம் ஜனநாயகத்தின் பெயரால் சிறிய நாடுகளை கத்திமுனையில் அடிமைப்படுத்த முயன்று கொண்டே இன்னொருபக்கம் ஜனநாயகத்தின் ஜன்மவிரோதியுடன் சமரசம் செய்து கொள்ளவும் முயற்சிகள் நடக்கின்றன. இன்னிலையில் அமெரிக்க தலைமையிலுள்ள நாடுகள் பாஸீஸத்தை பலப்படுத்தவே பார்க்கின்றனவென்று நடுநிலைமை வகிக்கும் எவரும் சந்தேகிக்காமலிருக்க முடியாது. எனவே அதன் பயனுக ஏற்படக்கூடிய நிலைமையை எதிர்த்து சமாளிக்கவும் தயாராயிருக்க வேண்டிய அவசியம். அதிலிருந்து தப்புவதற்கு நம்போக்கையே மாற்ற வேண்டியுமிருக்கலாம்.

ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.

அதை ஆதரிப்பது உங்கள் தேசீயக்கடமை.

மானேஜர், ஆஸாத். குடந்தை.

ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கம்.

மஹாத்மாஜீ கொலையால் பொங்கி யெழுந்த மக்களின் கோபத்திலிருந்தும் அரசாங்கத்தின் பிடியிலிருந்தும் தப்புவதற்கு அனேக சேவக்சங்கத்தினரும் இதர வகுப்புவாத பாஸீஸ ஸ்தாபனங்களின் முக்கியஸ்தர்களும் திடீரென்று மறைந்துவிட்டனர். அரசாங்கம் சிலரைக் கைது செய்து காவலில் வைத்தது பலாத்காரச் செயல்கள் அடங்கின ஆயினும் பாஸிஸ்டுக்கும்பல் அறவே கலைந்துவிடவில்லை. பரஸ்பர தொடர்பு அற்றுப்போகாமலிருக்க அந்தரங்கமாய் முயன்றுகொண்டிருந்தது இன்று அரசாங்கம் சற்று தளர்ந்தவுடனே திரும்பவும் மும்முரமாய் நடவடிக்கைகளை பஹிரங்கமாக ஆரம்பித்துவிட்டது.

ஒருபக்கம் தடையை நீக்கும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு சொல்லியோ சொல்லாமலோ மக்களிடம் கையெழுத்துக்கள் வாங்கப்படுகின்றன. இன்னொருபக்கம் பாஸீஸப் பிரசாரமும் நடக்கின்றது ஐக்கியமாகாண போலீஸ் மந்திரியான லால்பஹதூர் சாஸ்திரி வெளியிட்ட தகவல்களிலிருந்து சேவக்சங்க நடவடிக்கைகளின் தன்மை. விளங்குகின்றது. தங்கள் கொள்கைகள் மட்டுமின்றி ஹிந்து ராஜ்ய எண்ணத்தையும் நாட்டில் பரப்புகின்றனர்

எல்லையற்ற வசதிகளையும், கொழுத்த முதலாளிகளின் பணத்தையும் பிரபலஸ்தர்களின் ஆதரவையும், லட்சக்கணக்கில் மெம்பர்களையும் கொண்டதொரு ஸ்தாபனம் ஒரு சிலரைக் கைது செய்து காவலில் வைத்ததால் மடிந்துவிட்டதென்று நம்பி கண்ணை மூடிக்கொண்டிருக்கும் சர்க்கார் உடனே விழிப்படையவேண்டியதவசியம்.

சேவக் சங்கம், மஹாசபை போன்ற ஸ்தாபனங்கள் அஞ்ஞாதவாசத்தில் இறங்கியபோதே திரும்பவும் அவை தலை தூக்குமென்று நினைத்தது இன்று உண்மையாகி விட்டது. அரசியலிலிருந்து விலகிய ஹிந்து மஹா சபை திரும்பவும் அரசியல் அரங்கத்தில் இறங்க தயாராகிவருகிறது. சாக்குப்போக்குகளால் தடையை நீக்கிக்கொள்ள சேவக் சங்கம் முயலுகின்றது வகுப்புவாத பாலாத்கார பாஸீஸப்போக்கைக் குறித்து தங்கள் மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களை மறுக்கும் விண்ணப்பங்களில் கூட அவர்களுடைய மனப்பான்மை தொனிக்காமலில்லை.

டில்லி சேவக்சங்கத்தினர் பிரதம மந்திரி பண்டித நேருவிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்தனர். அதில் தங்கள் நிரபராதத் தன்மையை விளக்கியபிறகு "சேவக் சங்கம் ஒன்றுதான் சமாஜத்தை கம்யூனிஸத்திலிருந்துகாப்பாற்றமுடியும்" என்று கூறப்பட்டிருக்கிறது முடிவில் "முஸ்லிம்களின்பிரச்னையுமிருக்கிறது நண்பனையும் விரோதிகளையும் பாகுபாடு செய்வதன்மூலம் சர்க்கார் தன் யோக்கியப் பொறுப்பை நிரூபிக்குமென்றும் நண்பர்களின் வேஷத்திலிருக்கும் விரோதிகளைத் திருப்தி செய்வதற்காக நண்பர்களை புறக்கணித்து தன்னுடையமுட்டாள்தனத்தை வெளிப்படுத்தாதென்றும் நம்புகிறோம்." என்று முஸ்லிம்களைத் தாக்கியும் எழுதப்பட்டிருக்கிறது.

முஸ்லிம்கள் அனைவரும் தேசத்துரோகிகள். நண்பர்களாக வேஷம் போட்டுக் கொண்டிருக்கின்றனரென்பதே இதற்கு அர்த்தம். கொள்கை ஒருபுறமிருக்கச் சட்டரீதியாகப் பார்த்தாலும் இரண்டு சமூகங்களிடையே அவநம்பிக்கையும், வெறுப்பும் ஏற்படும்படியான அபிப்பிராயங்களை வெளியிடுவதும் குறிப்பாக அதை புஸ்தக ரூபத்தில் அச்சிட்டு மக்களிடையே விநியோகிப்பதும் குற்றமாகும். இவ்வித வெளியீட்டை அரசாங்கம் சகித்துக் கொண்டிருந்ததுதான் ஆச்சரியம். விண்ணப்பத்தில் கையெழுத்திட்டிருப்பவர்கள் சேவக் சங்கத்தில் தாங்கள் வகித்துவரும் பதவிகளையும் காட்டியிருப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

சட்ட விரோதமானதென்று அறிவிக்கப்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபனத்தில் பதவி வகிப்பதாக பஹிரங்கமாய் அறிவித்தபிறகும் சட்டம் அவர்களை ஒன்றும் செய்யாமலிருப்பதுதான் புரிந்துகொள்ள முடியவில்லை நடவடிக் கைகளிலிருந்து விலகுவதாகவோ, அல்லது ஸ்தாபனத்தைக் கலைப்பதாகவோ ஒன்றுமே சொல்லாதபோது சங்க குருஜி எப்படி விடுதலை செய்யப்பட்டாரென்பதும், வகுப்புவாத ஸ்தாபனங்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாதென்றும், அவர்களுடைய பிரதிநிதிகளுக்கு பேட்டியளிப்பதில்லையென்றும் இந்திய சர்க்கார் முடிவுசெய்திருக்கையில் பிரதம மந்திரி பதவியிலிருந்து வரும் ஸர்தார் படேல் சேவக்சங்க குருஜீக்கு எப்படி பேட்டியளித்தாரென்பதும் தெரியவில்லை சேவக் சங்கம் வெறும் வகுப்புவாதஸ்தாபனம் மட்டுமல்ல சட்டவிரோமான ஸ்தாபனமுமாகும்.

ஒரு புறம் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கைகளில் முனைந்திருக்கின்றனர். இன்னொரு புறம் அரசியலிலிருந்து விலகப்போவதாக சொல்லப்படுகிறது இது தடையை நீக்கிக்கொள்வதற்காககையாளப்படும் உபாயமாகும். அதனால் யாரும் ஏமாற முடியாது.

பொதுஜனத் தொண்டே தங்கள் லட்சியமென்று முதலில் அறிவித்த காக்ஸார்கள் பின்னால் எந்த ரூபமெடுத்தனரென்பது அனைவருக்கும் தெரியும். சேவக் சங்கமும் ஆரம்பத்தில் அதே லட்சியத்தைத் தான் வெளியிட்டிருந்தது. ஆயினும் அதன் நடவடிக்கைகளையும் கடந்தகால பாஸீஸப்போக்கையும் பார்த்த பிறகு எந்தஒரு பைத்தியக்காரனுக்கும் சந்தேகமிருக்க முடியாது, அவர்களுடைய அபாயகரமான நடவடிக்கைகளை அறிந்திருக்கும் அரசாங்கம் ஏமாறுமென்று நினைப்பதற்கில்லை.

தடை நீக்கப்பட்டால் அபாயகரமான விளைவுகள் ஏற்படுமென்பது நிச்சயம். இதர சமூகங்களும் வகுப்புவாத அடிப்படையில் தொண்டர் படைகளை அமைக்கலாம், அத்துடன் நாட்டிலிருந்து பாஸீஸத்தை விரட்டியடிக்க விரும்பும் முற்போக்கு வாதிகளும் ஒரு வகுப்புவாத மற்ற தொண்டர் படையை திரட்டலாம். அதன் பிறகு நாட்டில் அமைதியிருக்குமா வென்பது சந்தேகந்தான்

சேவக் சங்கத்தின் கொள்கைகளும் லட்சியமும் எந்த சமயத்திலும் கண்டிக்கத்தகுந்தவை யென்பது உண்மையாயினும் பிரிவினைக்குப் பிறகு அவ்வித ஸ்தாபனத்தின் அவசியம் அறவே யிருக்கவில்லை. நாட்டில் பரிபூரண மெஜாரிடியாக இருக்கும் ஹிந்துக்களுக்கு எவ்வித அபாயமுமிருக்கமுடியாது எனவே வகுப்புவாத அடிப்படையில் அதை பலப்படுத்த வேண்டிய அவசியமே யில்லை.

உண்மையில் சேவக் சங்கம் ஒரு பாஸிஸ்ட் ஸ்தாபனம் கள்ளங்கபட மற்ற உணர்ச்சி மிக்கவாலிபர்களைத் தூண்டிவிடவும் சுலபமாய் பெரும்பான்மையினரின் ஆதரவைத் திரட்டவுமே வகுப்புவாதப்போர்வையைப் போர்த்திக் கொண்டிருக்கிறது பலாத்கார உணர்ச்சி குன்றிப்போகாமலிருப்பதற்கென்றே இதர சமூகத்தினர் மீது வெறுப்புணர்ச்சி உண்டாக்கப்படுகிறது.

சேவக் சங்கத்தின் மீதுள்ள தடையை நீக்குவது நாட்டுக்கும் நாட்டின் மத அடிப்படை யற்ற அந்தஸ்துக்கும் தாங்கமுடியாத பெருத்த அடியாகவேயிருக்கும் எனவே பாஸிஸ்ட் ஸ்தானத்தின் மீதுள்ள தடையை நீடிப்பதுடன் திருப்பவும் ஆரம்பித்திருக்கும் அவர்களுடைய நடவடிக்கைகளை நசுக்குவதில் அரசாங்கம் கடுமையாக நடந்துகொள்ளு மென்றும் நம்புகிறோம் அரசாங்கத்தின் தாராள மனப்பான்மைக்கு ஏற்கனவே விலை கொடுத்தாய்விட்டது. இனியும் பலி கொடுக்கக்கூடிய சக்தி தேசத்தினிடமில்லை.

ரா. சு. சே. சங்கம்
தடை நீக்கினால் அபாயம்.

இந்திய சர்க்காருக்கு
டில்லி மா கா. க. எச்சரிக்கை

ஸ்ரீ ராதாரமண் தலைமையில் டில்லி மாகாண காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானம்.

“ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தின் மீதுள்ள தடையை நீக்குவதற்கு செய்யப்படும் முயற்சிகளை டில்லி மாகாண காங்கிரஸ்கமிட்டியின் நிர்வாகக்கமிட்டி பலமாக சந்தேகிக்கின்றது

ஹிந்துக்களின் சமூகம், கலாச்சாரம் பலப்படுவதே நோக்கமென்றும், சட்ட விரோதமான, மறைமுக பலாத்கார அரசியல், வகுப்பு துவேஷ நடவடிக்கைகளுக்கும் சேவக் சங்கத்துக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை யென்றவாதத்தின் அடிப்படையில் தடையை நீக்கும்படி கோரப்படுகிறது.

பாபூஜியின் தியாகத்துக்கு முன்பும் அதற்குப் பிறகும் சங்க நடவடிக்கைகளின் போக்கே சங்கத்தின் அமைதி, சட்டம் என்றவாதத்தை பொய்ப்பிக்கின்றன.

தடை விதித்த பிறகும் ஏதாவதொரு ரூபத்துடன் சில சமயங்களில் பஹிரங்கமாகக்கூட வெறுக்கத் தகுந்த வகுப்புத் துவேஷத்தையும் பலாத்காரத்தையுமே சங்கம் பிரசாரம் செய்து வந்திருக்கிறது.

சமூகத்தின் பழைய அமைப்பை தகர்ப்பதும் இந்தியாவின் மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சியின் அமைதிக்கு பங்கம் விளைவிப்பதுமே அவர்களுடைய பிரசாரத்தின் லட்சியம் தன்னிடமுள்ள உண்மைகளின் அடிபபடையில் சங்கத்தின் மீதுள்ள தடையை நீக்கக்கூடாதென்பதே இக்கமிட்டியின் ஏகோபித்த அபிப்பிராயம். சங்கத்தின் மீதுள்ள தடையை நீக்குவதன் பயனாக வகுப்புவாதக் கும்பல் திரும்பவும் உயிர்பெற்று விடுமென்றும் அதனால் அபாயகரமான விளைவுகள் ஏற்படுமென்றும் இந்திய சர்க்காரை எச்சரிப்பது தன் கடமையென்று இக்கமிட்டி உணருகிறது”

உங்கள் வியாபாரம் விருத்தியடைய
ஆஸாதில்
விளம்பரம் செய்யுங்கள்.

'ஆஸாத்' அன்பர்களுக்கு வேண்டுகோள்.

இந்தியப் பிரிவினையுடன் வெள்ளையர்களும், அவர்களுடையஏஜண்டுகளும் சேர்ந்துபெருமைப்படத்தக்க சரித்திரத்தை தாங்கிநின்ற முஸ்லிம் சமூகத்தை ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பல கூறுகளாகப் பிரித்துவிட்டனர். சுயநலத்துக்காக இந்திய முஸ்லிம்களுக்கும் தேசீய சகோதரர்களுக்குமிடையேவெறுப்பை மூட்டி நாட்டை பிரித்துக்கொண்டு சென்றுவிட்டனர். இன்று இந்திய முஸ்லிம்கள் தங்களுடைய விதியை தாங்களே நிர்மாணிக்கவேண்டும். இந்தியர்களுக்கு எதிராக நம்மை உபயோகித்தவர்கள் இந்திய யூனியனுக்கு விசுவாசமாய் இருங்களென்று போகிற போக்கிலே உ தேசித்தனர். சமூக ஒற்றுமையைக் குலைத்து விட்ட பிறகு இவ்வித உபதேசங்கள் எந்த அளவுக்கு பயனளிக்குமென்பது சிந்தனைக்குறிய விஷயம்.

நடந்தது நடந்தேறிவிட்டது. மாறுபட்ட இன்றைய நிலைமையில் பிரிந்த உள்ளங்களை மீண்டும் இணைக்க நாம் பெரு முயற்சி செய்தாகவேண்டும். நம்முடன் வாழும் இந்திய மக்கள் நம்மீது கொண்டிருக்கும் சந்தேகங்களை அகற்றி கடந்த பத்து வருஷ மனக்கசப்புக்களை மறக்கும்படிச் செய்து பரஸ்பர சௌஜன்யமுள்ள சூழ்நிலையை திரும்பவும் உண்டாக்க உண்மையான முஸ்லிம்களாய் நடந்து, நம்மையும், தாய்நாட்டையும் முன்னேற்ற வேண்டியது நம் கடமை. அரும்பாடுபட்டு நம் மூதாதையர் அடிகோலிச்சென்ற ஒற்றுமை வழியில் முன்னேறுவதன் மூலமே நாம் நாடடுக்குச் சேவை செய்ய முடியும்.

சுய நலமிகளின் சூழ்ச்சிகளால் சௌஜன்யம் சீரழிவதைப் பார்த்துக்கொண்டு நாம் சும்மா யிருக்கவில்லை. வகுப்பு ஒற்றுமைக்காக உ ழத்தோம். தென் இந்தியாவில் குறிப்பாக சென்னை மாகாணத்தில் பல இடங்களுக்கும் சென்றுபார்த்தோம்,

தமிழ்நாடு, ஆந்திர, கேரள கிராமங்களையும்கூட நாம் விடவில்லை. எம்மதத்தைச் சேர்ந்ததாயிருப்பினும் உண்மைகளையும் உயரிய அரசியல் நோக்கங்களையும் இந்த நாட்டுமக்கள் வரவேற்கின்றனரென்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட்டது. எங்களுடைய குரல் பொதுமக்கள் காதுகளுக்கு எட்டும்படிச் செய்வதற்கு காங்கிர அன்பர்கள் பெருமளவில் உதவினர். கடவுள் கிருபையால், நம்மை எதிர்த்தவர்கள்கூட இன்று ஒத்துழைக்க முன்வருகின்றனர்.

இனி நாட்டில் எந்த வகுப்புவாதத்திற்கும் இடமில்லை யாயினும் சௌஜன்யத்தை வளர்த்து, சகோதாத்துவத்தை பலப்படுத்த 'ஆஸாத்' போன்ற ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைக் குறிக்கோளாகக்கொண்ட அரசியல் பத்திரிகை யொன்று அவசியமென்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

'ஆஸாத்' பொருளாதார நெருக்கடியையும் பொருட்படுத்தாமல்பத்துமாதங்களாகசேவைசெய்து வருகின்றது. மாதம் 500 ரூபாய் நஷ்டத்துடன் நடந்தாலும் அதன் முக்கியத்துவத்தை உத்தேசித்து அதை நஷ்டமென்று சொல்ல முடியாது. பல நண்பர்களின் உதவி ஒருவாறு ஈடு செய்து வருகிறது. உண்மை முஸ்லிமும், காங்கிரஸ் வாதியும், தேசீய பிரசார வேலைகளை என்றுமே ஆதரித்து வந்தவருமான ஷாஜி M. அப்துல் ரஹ்மான் சாஹிப் (சென்னை) அவர்களுடைய ஆதரவையும் 'ஆஸாத்' பெற்றிருக்கிறது ஆயினும் நவீன முறையில் வெளிவருவதற்கு அனைவரின் பொருளாதார உதவியையும் 'ஆஸாத்' நாடுகின்றது. இன்று இருப்பதை விட வருங்காலத்தில் 'ஆஸாத்' செய்துவரும் சேவை முக்கியத்துவம் அடையுமென்பதில் சந்தேகமில்லை.

'ஆஸாத்' போன்ற பத்திரிகையின் அவசியத்தை நம்மைப்போலவே நண்பர்களும் உணர ஆரம்பித்திருக்கின்றனர். 'ஆஸாத்' தன் சேவையில் அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்திருக்கிறது. அநேகர் 'ஆஸாத்' வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கின்றனர். இன்று பல கஷ்டங்களிடையே வெளிவரினும் வருங்காலத்தில் உன்னத நிலைமையில் 'ஆஸாத்' வெளிவருமென்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. 'ஆஸாத்' நிதிக்கு நன்கொடை யளிக்க தஞ்சைஜில்லா காங்கிரஸ் கமிட்டியினர் தீர்மானித்ததைகேள்வியுற்றுமகிழ்ச்சியுற்றோம். ஹிந்து முஸ்லிம் சகோதரர்கள் 'ஆஸாத்' நிதியில் பங்கெடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

— ஆசிரியர்.

'ஆஸாத்'

பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.

ஏஜண்டு பெயர்:

அப்துல் சலாம், ஈரோடு.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 8—11—'48 திங்கட்கிழமை { இதழ் 39

பண்டாரவாடை சிரிக்குதே!

இரண்டு முஸ்லிம்களுக்கு மந்திரி சபையில் இடமளிக்க சென்னைப் பிரதமர் பலமுறை முன் வந்ததாகவும் தான் அதை உதறித்தள்ளி விட்டதாகவும் லீக் தலைவர் ஜனாப் இஸ்மாயீல் ராவுத்தர் 11—10—48-ல் பண்டாரவாடை மசூதிக்குள் பேசியதை 18-10-48 இதழில் பிரசுரித்தோம் ஸர்தார் ஸ்ரீ வ. வேதரத்னம் பிள்ளை அச்செய்தியைப் பற்றிய உண்மை என்னவென்று சட்டசபையில் கேட்டார். "முஸ்லிம்களுக்கு இரண்டு மந்திரி ஸ்தானங்களை அளிக்க முன்வந்ததாகச்சொல்லுவது ஆதாரமற்றதும் உண்மையின்மையுமாகும்" என்று பிரதமர் சார்பில் ஸ்ரீ மாதவமேனன் பதிலளித்தார். அதிலிருந்து இஸ்மாயீல் ராவுத்தரின் பீத்தல் தவறென்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. காங்கிரஸ் பத்திரிகை (ஆஸாத்) உண்மைகளைத் திரித்துக்கூறுவதிலும் லீகர்களைத் தாக்குவதிலும் பேர் போனதென்றும்தான் அப்படிப் பேசவில்லையென்றும் ஜனாப் இஸ்மாயீல் ராவுத்தர் ஒரு பக்கம் பொங்கி வழிந்தார். இன்னொரு பக்கம் காங்கிரஸ் பத்திரிகை (ஆஸாத்) விஷமத் தனமாக செய்திகளை பிரசுரிப்பதாக ஜனாப் அன்வர் சீறினார். பண்டாரவாடையில் பேசியதையே இதர இடங்களிலும் இஸ்மாயீல் ராவுத்தர் பேசியிருப்பதாக தகவல்கள் கிடைத்து வருகின்றன. ஐந்து மாதங்களுக்கு முன்னால் அவர் திருச்சியிலும் இதையே பேசினாரென்று திருச்சி ஜில்லா முஸ்லிம் லீக் உதவி காரியதரிசி வெளியிட்டிருக்கும் தகவல் இதே இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது காஷ்மீர் படையெடுப்பில் தங்களுக்கு சம்பந்தமேயில்லை யென்று பத்து மாதங்கள்வரை மறுத்துக் கொண்டிருந்து கடைசியில் பாகிஸ்தான் படைகளும் காஷ்மீரில் போரிடுவதாக ஒப்புக் கொண்ட சர்வதேசப் புகழ் புளுகர்களின் சிஷ்யர்கள் உண்மை பேசுவார்களென்று எதிர்பார்க்க முடியுமா? அண்டப்புளுகு ஆகாசப் புளுகெல்லாம் லீக் தலைவர்களுக்கு உறைபோடவும் காணாதென்பது நமக்கு நன்றாகத் தெரியும். முழு பூசனிக்காயை சோற்றில் மறைப்பதென்ற பழமொழி அவர்களுக்குத்தான் பொருந்தும். லீக் தலைவர்கள் இப்படிப் பேசித்திரிவதற்குக் காரணங்களுண்டு வெள்ளையன் வெளியேறிய பிறகு இந்தியாவில் லீக் தலைவர்கள் கட்டை பொம்மைகள்போல் செயலற்றுப்போய்விட்டனரென்பது வெளிப்படை. அவர்களை சீண்டுவார் யாருமில்லை; லட்சியம் செய்வாருமில்லை. அவர்களுடைய வீர, சூர, பராக்கிரமங்களை நம்பியிருந்தவர்கள் இன்று ஏமாற்றமடைந்து வருகின்றனர். இன்று தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு அவர்கள் பேச்சைக்கேட்டு பாகிஸ்தானை ஆதரித்ததே காரணமென்று ஆத்திரங் கொள்ளுகின்றனர். இது லீக் தலைவர்களுக்கு நன்றாகத்தெரியும். எனவே பிரிவினைக்கு முன் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு லீகர்களால் கிடைத்து வந்த வரவேற்புகளும், உபசாரங்களும் இனி தங்களுக்கே கிடைக்குமென்று அவர்கள் எதிர்பார்ப்பது சகஜம். அதற்காக லீகர்களை தங்கள் வலையிலேயே வைத்திருக்க முயலுவதும் இயற்கை. ஆகையால் தங்கள் தயவின்றி சர்க்கார் சரிவர நடக்க முடியாதென்றும் அதனால்தான் மந்திரி பதவிகளை ஏற்கும்படி தங்களை கேட்டுக் கொள்ளுகிறார்களென்றும் முலிம் பொது மக்களுக்கு தவறான நம்பிக்கை யூட்டுவதே அவர்கள் இப்படிப்பேசித்திரிவதற்கு காரணமிருக்க வேண்டும்; அல்லது மந்திரி பதவிகளைக் கூட ஏற்கவோ ஏற்றுக்கொண்டு சர்க்காருடன் ஒத்துழைக்கவோ தாங்கள் தயாராயில்லை யென்பதை மறைமுகமாகப் பேசி சர்க்காருடன் ஒத்துழைக்கக் கூடாதென்ற எண்ணத்தை முஸ்லிம் பொதுமக்களிடையே உண்டாக்குவது அவர்கள் நோக்கமாயிருக்க வேண்டும். இதை தவிர அவர்களுடைய வாய் வீச்சுக்கு வேறு காரணமிருப்பதாகத் தெரியவில்லை காரணம் எதுவாகவுமிருக்கட்டும்; பண்டாரவாடை சிரிக்குதே! முஸ்லிம்கள் பொய் சொல்லலாகாதென்று அவர்களுக்குத் தெரியுமே? தங்கள் தான் தோன்றித் தலைவன் மசூதியில் உண்மைக்குமாறாகப் பேசியதையும் பிறகு அப்படிப் பேசவேயில்லையென்று மறுத்ததையும் நினைக்கும் போது பண்டாரவாடை லீக் முஸ்லிம்கள் வெட்கித் தலைகுனிகிறார்களே! நீண்ட நாட்கள்வரை பித்தலாட்டக்கார லீக்தலைவர்களின் கைக்கருவிகளாக இருந்தார்களெனினும் முஸ்லிம்கள் பொய்யர்களல்லவே! சொன்னதை இல்லையென்று சொல்ல சம்மதிக்காமல் உயிரையே விடத் துணிந்த வீர புருஷர்களின் பெருமைப் படத்தக்க சரித்திரங்களை பிதுர்ராஜ்ஜித செல்வமாகக் கொண்

★ கதம்பம். ★

எட்டணா காங்கிரஸ் நண்பர்கள்

காங்கிரஸின் புதிய விதிகளில் நாலணா அங்கத்தினர் பதவி நீக்கப்பட்டுவிட்டதால் ஸ்தாபனத்துக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுசெய்ய எட்டணா காங்கிரஸ் நண்பர்கள்' சேர்க்கும் யோஜனை குறித்து காங்கிரஸ் தலைவர்கள் ஆலோசித்து வருகின்றனர். இந்தமுறைப்படி ஒவ்வொருவரும் வருஷம் எட்டணா செலுத்தி காங்கிரஸ் நண்பர்களாக பதிவுசெய்து கொள்ள முடியும்.

சென்ற வருஷமிருந்த அளவுக்கு 'நண்பர்கள்' பதிவுசெய்யப்பட்டால் ஐக்கிய மாகாணத்தில்மட்டும் ஸ்தாபனத்துக்கு கிட்டத்தட்ட பதினாறு லட்ச ரூபாய்கள் லாபம் கிடைக்கும்.

ஃ ஃ ஃ

உண்மை அடிப்படையில் சிந்திக்கும் தகுதியில்லை

ஆங்கில ஜாதிக்கு ஷாவின் அடி

வெளிநாட்டு உறவுவிஷயத்தில் அயர்லாந்தின் முடிவைக்குறித்து ஜார்ஜ்பெர்னாட்ஷா அபிப்பிராயம் தெரிவிக்கையில் "பிரிட்டனுடனுள்ள உறவை அயர்லாந்து அறவே அறுத்துக்கொண்டால் அதில் முக்கியத்துவம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்று கூறினார்.

தொண்ணூத்திரண்டு வருஷங்களுக்கு முன் டப்ளினில் பிறந்த மி டர் ஷா மேலும் கூறியதாவது, " அயர்லாந்து மக்கள் எப்பொழுதுமே இங்கிலாந்தில் அன்னியர்களாகவே இருக்கின்றனர் இத்தனை வருஷங்களாக இங்கு இருந்தும்கூட நான் அன்னியனாகவே இருக்கிறேன். உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு சிந்திக்கும் சிலரில் நானும் ஒருவன். இங்கிலாந்து மக்களுக்கு உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு சிந்திக்கும் தகுதியில்லை

உறவு விதிகள் ரத்து செய்யப்படுவதால் கொஞ்சமும் மாறுதல் ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை. அயர்லாந்து மக்கள் எப்பொழுதும்போல் இங்கிலாந்துக்கு வந்து கொண்டிருப்பர். இங்கு வந்து தங்கள் அறிவை அவர்கள் பிரயோஜனப்படுத்திக் கொள்ள முடியும். இப்பிரச்னை பூராவையும் சரியாகத் தீட்டிக்காட்டுவதற்கு நான் ஆயிரம் சவரன்களில் ஒரு கட்டுரை எழுதுவேன்.

ஃ ஃ ஃ

காஷ்மீர் காந்ீய வழியில் நடக்கும்

[ஷேக் அப்துல்லா]

சென்ற வருஷம் முஸபராபாத், பூஞ்ச் முதலிய பிரதேசங்களில் பாகிஸ்தானுக்கு எதிராக போரிட்டு உயிர் நீத்த சீக்கியர்களின் நினைவுக் கூட்டத்தில், "காஷ்மீர் எப்பொழுதுமே மஹாத்மா காந்திஜி காட்டிய அன்பு, சகிப்புத்தன்மை வழியில் நடக்கத் தீர்மானித்துவிட்டது" என்று ஜம்மு, காஷ்மீர் பிரதம மந்திரி ஷேக் அப்துல்லா கூறினார். மேலும் அவர் "எதிரிகளையும் நண்பர்களாக மாற்றவல்ல மந்திர சக்தியே அன்பு மனிதன் மனிதனை வெறுக்கவும் துண்புறுத்தவும் ஆரம்பித்துவிட்ட பிறகு அது நிற்ப

டிருக்கும் முஸ்லிம்கள் உண்மைக்கு மாறாக பேசுபவர்களை தலைவர்களென்று ஏற்றுக்கொள்ள முடியுமா? உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சலேன்? காங்கிரஸ் பத்திரிகை (ஆஸாத்) விஷமத்தனமான செய்திகள் பிரசுரிக்கிறதாம! யார் விஷமிகள்? இந்தியாவைக் கூறு போட்டு லட்சக் கணக்கான மக்களின் உயிருக்கு உலைவைத்தவர்களல்லவா? பல லட்சம் குழந்தைகளை அனாதைகளாக்கி, பல்லாயிரக்கணக்கான பெண்களை கற்பிழக்கச் செய்தவர்களல்லவா? ஒரு பாதி முஸ்லிம்களை வறுமைப்படுகுழியில் தள்ளி மறுபாதியை அந்தரத்திலே தொங்கவிட்டவர்களல்லவா? அவர்களைப்போன்ற விஷமிகளை உலக சரித்திரத்தில்காட்டமுடியுமா? அவர்கள்விளைவித்த நாசத்தைபோல் நாசம விளைவித்த நிர்மூலிகள் இதற்கு முன் உலகத்தில் தோன்றியதுண்டா? விஷமிகள் யார்? என்பது உலகுக்குத் தெரியும். பாகிஸ்தானென்று கூச்சல்போட்டு 30 ஆயிரம் கிழக்குப்பாஞ்சால மசூதிகளில் ஆண்டவனுடைய பெயரைச் சொல்ல ஒரு முஸ்லிமும் இருக்கமுடியாமல் செய்தவர்களே விஷமிகளென்பதை முஸ்லிம் பொதுமக்களும் உணர்ந்து வருகின்றனர். காங்கிரஸ் முஸ்லிம்கள் அன்று சொன்னதையே இன்றைக்கும் சொல்லுகின்றனர். என்றைக்கும் சொல்லுவர். காங்கிரஸ் பத்திரிகைகளோ அல்லது காங்கிரஸகாரர்களோ விஷமத்தனம் செய்வதில்லை. இனி தாறுமாறாகப்பேசி முஸ்லிம் பொதுமக்களை ஏமாற்றமுடியாது. இஸ்லாமுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பவர்களுக்கும், இஸ்லாமுக்கும் சம்மந்தமில்லை யென்பதை அவர்கள் தெரிந்து கொண்டுவிட்டனர். எனவே இல்லாததைப்பேசி முஸ்லிம்களை ஏமாற்ற முயலுவதை விட்டு தங்களுடைய கடந்தகால தவறுகளுக்கு பிராயசித்தம் செய்ய லீக் தலைவர்களை அழைக்கிறோம்

தில்லை. ஏனெனில் எந்த ஒரு காரியமும் எதிரொலிக்கவே செய்யும் அதனால் வெறுப்பு, கொடுமையின் சக்கரம் சுழல ஆரம்பித்துவிடுகின்றது. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக காந்திஜி உயிரையே அர்ப்பணித்தார். இத்துறையில் இந்தியா, பாகிஸ்தான் டொமினியன்களின் ஏகோபித்த முடிவுகளை கௌரவித்து நடக்க விரும்புகிறோம் ”

பாகிஸ்தானை எதிர்த்து வீரத்துடன் போராடிய சீக்கியர்களை பாராட்டிய பிறகு “சீக்கிய அகதிகளுக்கு இருந்துவரும் கஷ்டங்களை நானறிவேன். என் எண்ணத்தைவிட்டு அது அகலவில்லை. சகிப்புத் தன்மையுடன் நடக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். சாத்தியமான எல்லா உதவிகளும் அவர்களுக்கு கிடைக்கும்.” என்று உறுதியளித்தார்.

ஃ ஃ ஃ

கிழக்கு வங்கத்திலிருந்து 14 லட்சம் பேர் வெளியேற்றம்.

கல்கத்தா அக் 23—

மேற்கு வங்க மந்திரி மிஸ்டர் நகூஞ்சா பிஹாரி பத்திரிகையாளர் மஹாநாட்டில் பேசும்போது “கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஏறக்குறைய $13\frac{3}{4}$ லட்சம் அகதிகள் மேற்கு வங்கத்துக்கு வந்துவிட்டனர். அவர்களில் எட்டு லட்சம் பேர் கல்கத்தாவிலும் ஆறு லட்சத்திற்கும் சற்று குறைவானவர்கள் இதர ஜில்லாக்களிலும் குடியேறியிருக்கின்றனர்.” என்று வெளியிட்டார். மேலும் அவர் அறிவித்ததாவது, “அக்டோபர் 17-ந்தேதி வரை $7\frac{1}{4}$ லட்சம் அகதிகளுக்கு அரசாங்கத்தின் சார்பில் உதவி கிடைத்துவந்தது. அதனால் மாதம் ஒன்றுக்கு 25 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக அரசாங்கம் செலவு செய்யவேண்டியிருக்கிறது. இந்த வெளியேற்றம் தடுக்கப்படவில்லையேல் மேற்கு வங்க உணவு ரேஷன் முறை அறவே குலைந்துவிட நேரிடும்”

மேற்கு வங்கத்தின் பல்வேறு இடங்களில் அரசாங்கத்தின் 32 நிவாரண முகாம்கள் இருக்கின்றன. அரசாங்கத்தின் சிவில் சப்ளை இலாகா அகதிகளுக்காக கிடங்குகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறது. சர்க்கார் நிவாரண முகாம்களில் கிட்டத்தட்ட அறுபத்தி ஆறு யிரம் அகதிகள் இருந்துவருகின்றனர். சயால்தா ஸ்டேஷனில் சுகாதாரத்தைப் பாதுகாக்க அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சர்க்கார் முகாம்களைத்தவிர அனேக சர்க்கார் தொடர்பற்ற ஸ்தாபனங்களும் சர்க்காருடன் ஒத்துழைக்கின்றன.

கல்கத்தாவிலும் சுற்றுப்புறங்களிலும் ராணுவ பார்க்குகள் இதர இடங்களை பலவந்தமாக ஆக்கிரமித்திருக்கும் சில அகதிகளின் போக்கை மந்திரி கண்டித்தார்

வாய்க் கொழுப்பு,

எல்லைப்புரகாந்தி கான் அப்துல் கபார்கான் விஷயத்தில் கான் அப்துல் கையூம் கான் கலப்படமற்ற வெள்ளையனாக நடந்துகொள்வதாகத் தெரிகிறது தன்னலமற்ற தியாகியைத் தண்டித்ததுடன் திருப்தியடையாமல் வாய்க் கொழுப்பு வசை புராணமும் பாடி தன் உள்ளக்கொதிப்பை ஆற்றிக்கொள்ள விரும்புகிறார். சட்டம் எவ்வளவுதான் கடுமையாக விருப்பினும் பெரிய மனிதர்களை அவர்களுடைய உயரிய ஸ்தானத்திலிருந்து வீழ்த்த இடமளிப்பதில்லை. ஆனால் எல்லைப்புர பிரதம மந்திரி சட்டத்துடன் வாய்க் கொழுப்பையும் பிரயோகித்து தன்னுடைய நீச புத்தியை உலகுக்கு அம்பலப்படுத்துகிறார் எல்லைப்புர பிரதமர் அஸெம்பளியின் அங்கீகாரத்துக்காக பொது ஜன பாதுகாப்புச் சட்டத்தை சட்டசபையில் சமர்ப்பித்து பேசுகையில் “கான் அப்துல் கபார்கான் ஒரு பெரிய தேசத்துரோகி. அவருடைய உள்ளத்தில் இந்தியாவிடம் நேசமும் பாகிஸ்தானிடம் வெறுப்பும் நிறைந்திருக்கிறது. நான் குதாயீ கித்மத்கார்களை ஒடுக்கிய பிறகே நிம்மதியுடன் மூச்சுவிடுவேன்.”

கான் அப்துல் கபார்கானை துரோகி யென்று குற்றஞ்சாட்டுவது உலகத்திலேயே பெரிய பித்தலாட்டமென்பது உலகுக்குத்தெரியும். தன்னலமற்ற அவர் எதுவாகவேண்டுமானாலும் இருக்கட்டும் எண்ணமுள்ள கலகக்கார துரோகியா இருக்கமுடியாது. பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் அவருக்குமிடையே அபிப்பிராய பேதமிருந்தால் அதை சகித்தாகவேண்டும். ஜனநாயக அரசாங்கங்கள் கடுமையான அபிப்பிராய பேதங்களையும் சகிப்பதன் மூலமே நிலைத்திருக்க முடியும். அக்கிரமத்துக்கும் அடக்குமுறைக்கும் இலக்காகி சிறைக்குள் அடைபட்டுக் கிடக்கும் ஒருவரைப்பற்றி அவர் இல்லாதபோது துரோகி என்று குற்றஞ்சாட்டுவதும், குதாயீகித்மத்கார்களை ஒடுக்க சபதம் செய்வதும் எந்த ஜனநாயகமென்று தெரியவில்லை. தன் மானமுள்ள பட்டாணியர்கள், தன்னலமற்ற தங்கள் தலைவர் அகௌரவிக்கப்படுவதை சகித்துக்கொண்டிருப்பார்களா?

ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

அடுத்த ராஷ்டிரபதி பட்டாபி.

இத்தடவை காங்கிரஸ் தலைவர் ஸ்தானத்தை அபேட்சித்த அறுவரில் நால்வர் (பாபு ராஜேந்திர பிரஸாத், ஆச்சார்யா கிருபளானி, டாக்டர் பி ஸி. கோஷ், சங்கரராவ் தேவ்) தங்கள் பெயர்களை வாபஸ் பெற்றுவிட்டனர். டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவுக்கும், பாபு புருஷோத்தமதாஸ் தாண்டனுக்குமிடையே போட்டி நடந்தது. அரசியல் நோக்கங்கள் சம்மந்தப்பட்டவரை இருவருக்குமிடையே அதிக வித்தியாசமில்லை. டாக்டர் பட்டாபி ஒருகாந்தீயவாதி காந்திஜியின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார். ஆனால் தாண்டன் அநேக சந்தர்ப்பங்களில் காந்திஜியை எதிர்த்திருக்கிறார் குறிப்பாக தேசீய பாஷை, வகுப்புப்பிரச்னைகளில் அவருடைய கருத்துக்கள் மாறுபட்டவை.

நெருக்கடியான இன்றைய நிலைமையில் பரந்த மனப்பான்மை அவசியம். காந்திஜீ காட்டிய வழியே இந்தியாவுக்கு விமோசனமளிக்க முடியும். அன்று "பட்டாபி தோல்வி என் தோல்வி" என்று காந்திஜீ சொன்னார். இன்று பட்டாபி வெற்றி காந்தீயத்தின் வெற்றி என்று நாம் கொள்ளலாம். நெருக்கடியான சமயத்தில் பொருப்புவாய்ந்தஸ்தானத்துக்குபொருத்தமான பட்டாபி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்துக்கு இது ஒரு நல்ல அறிகுறியாகும்.

இந்தியா விடுதலை யடையாமலிருந்தவரை ஒரு இந்தியனுக்கு இந்திய தேசீய காங்கிரஸின் தலைமைப் பதவி மிகப்பெரிய கவுரவமாக இருந்தது. காங்கிரஸ் தலைவர் முடிசூடா மன்னராகக் கருதப்பட்டார். இன்று அப்பதவிக்கு முன்பிருந்த அளவு முக்கியத்துவம் இல்லாமல் போய்விட்டது காங்கிரஸின் முன்னணித் தலைவர்களில் சிலர் நிர்வாகத்தில் பொறுப் பேற்றுக் கொண்டிருப்பதும், காங்கிரஸின் அடிப்படை லட்சியமான சுதந்திரம் கிடைத்துவிட்டதுமே அதற்குக்காரணம்.

டாக்டர் பட்டாபி இதைவெகு அழகாக விளக்கினார். "தேசத்தில் காங்கிரஸ் இரண்டாவது ஸ்தானத்தை அடைந்திருக்கிறது. மாமியார் எப்பொழுதுமே குடும்பத்தில் அதிகாரம் செலுத்தமுடியாது. காங்கிரஸ் தன் அதிகாரத்தை கட்சியிடம் கொடுத்து விடவேண்டும்" என்று அவர்கூறியது முற்றிலும் பொருந்தும். இன்று நாட்டை எதிர்நோக்கும் பிரச்னைகள் அநேகமாய் நிர்மாணம் சம்பந்தப்பட்டவை. அவற்றை தீர்ப்பதில் பெருமளவு பொறுப்பு சர்க்காருக்கே ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில் தன் அதிகாரத்தை கட்சியிடம் ஒப்படைத்துவிட்டு சர்க்காருடன் ஒத்துழைப்பதில் நம்பிக்கையுள்ள ஒருவர் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நாட்டுக்கு நன்மையளிக்கமுடியும்.

சாயம் வெளுக்கிறது
பேசியதை மறுதலிப்பதேன்?
லீக் காரியதரிசியின் திகைப்பு!

இந்திய டொமினியன் முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் 11—10—48ல் பண்டாரவாடை கூட்டத்தில் பேசியதாக "ஆஸாத்" தமிழ் தேசீய வாரப் பத்திரிகையில் வெளியான செய்தியைக் குறித்து 28 அக்டோபர் 1948-ல் சென்னை சட்டசபையில் கேட்டபோது தான் அவ்விதம் பேசியதே கிடையாதென்று ஜனாப் இஸ்மாயில் மறுத்திருப்பதை பத்திரிகையில் படித்து திகைப்புற்றேன்.

1948 மே 9-ந் தேதி இந்திய டொமினியன் முஸ்லிம் லீக் தலைவரான ஜனாப் முஹம்மது இஸ்மாயீல் திருச்சிக்கு விஜயம் செய்தார். திருச்சி முனிசிபாலிடி சார்பில் அவருக்கு வரவேற்பும் அளிக்கப்பட்டது. அச்சமயத்தில் அவர் ஜனாப் V. S முகம்மது இப்ராஹிம் M. L. A. அவர்களின் இல்லத்தில் தங்கினார். திருச்சி அஞ்சுமனே ஹிஸ்புல்லாஹ் சார்பில் அவரை சந்தித்த தூதுகோஷ்டியின் தலைவனாக நான் சென்றேன். 18—10—48-ந்தேதி "ஆஸாத்" இதழில் வெளியான இதே கருத்துக்களை முஸ்லிம் லீக் ஊழியர்களிடையே தெள்ளத் தெளிவாக அவர் எடுத்துச் சொல்லியிருந்தார். எனக்கு ஏற்பட்ட சில சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள அவருடன் விவாதித்தேன் "மந்திரி சபையில் முஸ்லிம்களை சேர்த்துக்கொள்ள பிரதம மந்திரி பன்முறை முன்வந்திருக்கிறார் ஆனால் நாமே விலகியிருக்கிறோம். இவ்விஷயத்தில் இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவுடனும் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறேன்." என்று அவர் பேசிய வார்த்தைகள் என்னுடைய காதுகளில் இன்றைக்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன அதே விஷயத்தை ஐந்து மாதங்களுக்குப் பிறகு பண்டாரவாடையில் பேசியிருக்கலாமென்று நினைக்கிறேன். அவர் பேசியதை நான் ஒருவன் மாத்திரமின்றி என் சகாக்களில் பலரும் கேட்டிருக்கின்றனர். இப்படியிருக்க நம் ஒப்பற்ற முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் இஸ்மாயீல் சாஹிப் சட்டசபையில் தான் பேசியதை இல்லையென்று ஏன் மறுக்கிறாரென்பது தெரியவில்லை. இஸ்லாம் உண்மை பேசவே போதிக்கிறது. உண்மையை திரித்துக் கூறுவது ஒரு முஸ்லிமுடைய வேலையல்ல எனக்குத் தெரிந்த உண்மையை வெளியிடுவது என் கடமையென்ற எண்ணமே இதை எழுதும்படி என்னைத் தூண்டிற்றென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

G. அப்துல் லத்தீப்,
1—11—48

பண்டாரவாடையில் காங்கிரஸ் கமிட்டி.

இஸ்மாயில் மீது நடவடிக்கை எடுக்க தீர்மானம்.

8—10—48 வெள்ளிக்கிழமை மாலை பண்டார வாடை அல்கலாம் ஆபீஸில் காங்கிரஸ் மெம்பர்களின் கூட்டம் நடந்தது. மௌலானா கூ. அ. அப்துல் மஜீது சாஹிப் தலைமைவகித்தார். பண்டாரவாடை கிராம காங்கிரஸ கமிட்டிக்கு கீழ்க்கண்ட மெம்பர்களும், நிர்வாகிகளும் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தலைவர் ஜனாப் கூ. அ. அப்துல் மஜீது
உபதலைவர், ,, தா. மு. முஹம்மதுஇபுருஹீம்.
காரியதரிசி, ,, P. D. M. கனி
கூடடுக் காரியதரிசி ஸ்ரீ, S சுப்ரமணியம்.
பொக்கிஷதார், ,, M. M. அப்துல் மஜீது.

கமிட்டி மெம்பர்கள் :—

ஜனாப் P. A முஹம்மது இப்ராஹீம் Bsc-
,, S. O. K. அப்துல் சலாம் சாமியார்
,, க. ரு. அப்துல் ஹமீது.
,, P. E. முஹம்மது காசிம்.
,, K. A. முஹம்மது இப்ருஹீம்.
,, த. அ. ஜெயினுல்லாப்தீன்.
,, அ. தா. பீர் முஹம்மது
,, V. A. அப்துல் ஹமீது.
,, K. A. ராஜ் முஹம்மது.
,, K. P. அப்துல் மஜீது.

1—11—48-ல் நடந்த ஷை கிராம காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் 11—10—48-ல் M முஹம்மது இஸ்மாயில் பண்டாரவாடை வந்து காங்கிரஸைப் பற்றியும், காங்கிரஸ் முஸ்லிம்களைப்பற்றியும் அவதூறாகவும் பொய்யாகவும் செய்த பிரசங்கம் சம்பந்தமாகவும் பண்டாரவாடையில் பேசியதை சட்ட சபையில் மறுத்த விஷயமாகவும் ஜனாப் M. A. அப்துல் ஹமீது 31—10—48-ல் 'முஸ்லிம்' தினசரியில் வெளியிட்ட அறிக்கை சம்பந்தமாயும் சகல நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ள காரியக்கமிட்டி மெம்பர் கூ. அ. ராஜ் முகம்மது அவர்களுக்கு பூரண அதிகாரம் கொடுப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

○ ○ ○

கிராம காங்கிரஸ் கமிட்டி தலைவர் அவர்களுக்கு. பொ. தா. முகம்மது கனி எழுதிக்கொடுத்த ராஜினுமா லெட்டர். என்னவென்றால் சென்ற 11—10—48-ல் முஸ்லிம்லீக் தலைவர் M. முகம்மது இஸ்மாயில் நமதூர் பெரிய பள்ளிவாசலில் பிரசங்கம் செய்ததின் காரணமாக என்னை சிலர் பயமுறுத்தியதால் என் காரியதரிசி பதவியை ராஜிநாமா செய்துகொள்ளுகிறேன். தயவு செய்து என்னுடையராஜிநாமாவை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

—பொ. தா. முகம்மதுகனி.

கிராம காங்கிரஸ் கமிட்டி தலைவர் அவர்களுக்கு பொ. தா. முகம்மதுகனி எழுதிக்கொண்டது.

நான் முஸ்லிம் லீக் தலைவர் M. முகம்மது இஸ்மாயில் ருவுத்தர் நமதூர் பெரிய பள்ளிவாசலில் பிரசங்கத்துக்கு பிறகு தூண்டிவிடப்பட்ட சமூக பகிஷ்கார பயமுறுத்தலால் காரியதரிசி பதவியை ராஜினுமா செய்தேன் பண்டாரவாடையில் பேசியதைப்பற்றி சட்ட சபையில் கேள்வி எழுந்தபோது தாம் பேசவில்லை என்று பொய் சொல்லிய பிறகு பண்டாரவாடை முஸ்லிம்கள் உணர ஆரம்பித்திருக்கிருர்கள். பொய்பேசும் தலைவரின் கீழிருப்பதைவிட உண்மையே பேசும் பாபு ராஜேந்திரபிரசாதை தலைவராக கொண்ட காங்கிரஸிலேயே இருக்க விரும்புகிறேன். ஆனதால் என்னுடைய ராஜினுமாவை அங்கீகரிக்காமல் என்னை தொடர்ந்து காரியதரிசியாய் கருதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

—பொ தா. முகம்மதுகனி.

● ● ●

ஹம்தஸலவாத்துக்குப் பின் எனது அன்பு நிறைந்த பண்டாரவாடை, காங்கிரஸ் கமிட்டி தலைவர் அவர்கட்கு M. E. M. அலியின் ஸலாம் உரித்தாகுக.

யான் எனது உண்மை அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க. ஷை கமிட்டியில் மெம்பராகச் சேர்ந்தேன். ஆனுல் நான் மெரட்டல் காரர்களின் மெரட்டலுக்கு பயந்து சேர்ந்ததாகவும், பணத்திற்கு ஆசைப்பட்டு சேர்ந்ததாகவும் பலவித கெட்ட எண்ணத்துடன் பல பேர்கள் பேசுவதை முன்னிட்டும் இத்துடன் அனுப்பியிருக்கும், செப்டம்பர் 9-வ தாண்டனின் லெச்சரையும், 1—10—48வ சுதந்திர நாட்டின் ஆசிரியர் கலத்தையும், 11-10 48-ல் இந்தியா முஸ்லிம் லீக் தலைவரின் பிரசங்கத்தைகேட்டதினுலும் எந்தககட்சியிலும் சேராது தனித்து இருப்பதே மேல் என்று எனது மனதுக்கு உகந்ததாக தெரிவதால் எனது மெம்பா பதவியை தயவுசெய்து நீககிவிடும்படியும் இதையே எனது ராஜினுமாவாக கருதும்படியும் தயவாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மார்க்க சட்டப்படி அரசாங்கத்துக்கு ஒத்து நடப்பதென்ற உறுதியுடன் இருக்கிறேன் என்பதையும் இதன்மூலம் அறிவிக்கிறேன்.

வஸ்ஸலாம். இப்படிக்கு,
M. E. Md Ali, (M. F. B.)
12—10—48.

கிழக்கு பாகிஸ்தான்.

கிழக்கு வங்கத்தைவிட்டு ஹிந்துக்கள் வெளியேறி மேற்கு வங்கத்தில் குவிந்து வருவதற்த கிழக்கு வங்க சர்க்கார் ஏற்படுத்திய நிர்ப்பந்தமான நிலைமைதான் காரணமென்று மேற்கு வங்க காங்கிரஸ் கமிட்டி தலைவர் டாக்டர் சுரேஷ் சந்திர பானர்ஜீ குற்றம் சாட்டுகிறார். அதற்கு ஆதாரமாக அங்குள்ள முஸல்மான்களின் நடத்தை பற்றியும் அறிக்கையில் பிரஸ்தாபித்திருக்கிறார்

இது உண்மையாக விருந்தால் இஸ்லாமையும் மனித ஒழுக்கத்தையுட் இழிவுபடுத்தியது மட்டுமின்றி கிழக்குவங்க பாகிஸ்தான் ஆட்சி இந்திய முஸல்மான்களுக்கும் தீங்கு செய்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும். முடிவில் இதன் பலாபலன்கள் அவர்களுக்கே ந--ம் வி விக்குமென்று எச்சரிக்காமலிருப்பதற்கில்லை. நியாயம், நேர்மையுணர்ச்சி எவ்விதத்திலும் அவர்களை மன்னிக்கமுடியாது.

இன்று பரஸ்பர எதிர்ப்பு பிரசாரம் சர்வசாதாரணமாய் விட்டதென்பது உண்மைதான். பிரசாரம் உண்மையாகவுமிருக்கலாம்; பொய்யாகவுமிருக்கலாம்.

ஆயினும் கிழக்கு வங்கத்திலிருந்து ஹிந்துக்கள் வெளியேறி வருவதை ஒருவரும் மறுக்கமுடியாது எதிர்காலத்தைக் குறித்து அவநப்பிக்கை ஏற்படாதவரை - வெளியேறாமல் உயிர், உடைமையைக் காப்பாற்றுவது சாத்தியமில்லை யென்று உணராதவரை- தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும் தாயகத்தையும் வீடுவாசல்களையும் விட்டுயாருமே வெளியேறமாட்டார்களென்பது நிச்சயம். பிறந்துவளர்ந்த இடத்துடன் மனிதனுக்கு தனிப்பற்று உண்டு. எப்படியிருப்பினும் தன்னுடைய இடத்தில் இருக்கவே மனிதன் விரும்புகிறான். உயிருக்கும், உடமைக்கும் அபாயம் ஏற்பட்டாலன்றி வெறும் சந்தேகத்தின் காரணமாக மக்கள் தாயகத்தை விட்டு வெளியேறுவார்களென்று யாருமே நம்பமுடியாது

தினமொன்றுக்கு இரண்டு, மூவாயிரம் முஸ்லிமல்லாதார்வரை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறிவருவதை நினைக்கும் போழுது இந்திய முஸல்மான்சள் வெட்கித்தலைகுனிய வேண்டியிருக்கிறது. பதில் நடவ்டிக்கை உணர்ச்சி தலைதூக்கினால் இந்தியாவில் நிப்மதியுடன் வாழ்ந்து வரும் தங்களுக்கு என்ன நேருமோவென்று கலங்குகின்றனர்.

ஆயினும், என்னே! கிழக்குவங்க சர்க்காரின் அசட்டுத்தனம்! என்னே! பாகிஸ்தான் முஸ்லிம்களின் செத்துப்போன உணர்ச்சி! நடப்பதைப் பார்த்தபிறகும் மௌனம் சாதிக்கின்றனர். குற்றச்சாட்டு பொய்யாயிருப்பின் தாங்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்க அவர்கள் ஏன் முன்வருவதில்லை! பாகிஸ்தான் வாங்கிக்கொடுத்த பாவத்துக்காக இந்திய முஸல்மான்களுக்கு வெடிவைக்க விரும்புகின்றார்களா?

காங்கிரஸ் தலைவரின் அறிக்கையில் கண்டுள்ள சம்பவங்கள் உண்மையாகயிருப்பின் முஸ்லிமல்லாதார் வெளியேறுவதற்கு இருந்துவரும் காரணங்களை போக்குவதற்கு தங்கள் உயிரை பணயம்வைக்க வேண்டியது பாகிஸ்தான் முஸ்லிம்களின் கடமை நாங்கள் நிம்மதியுடன் வாழுகிறோம். எங்களுக்கு எவ்வித அபாயமுமில்லையென்று தாங்களாகவே முன்வந்து முஸ்லிமல்லாதார் அறிவிக்காதவரை உண்பதும், உறங்குவதுமில்லை யென்று பாகிஸ்தான் முஸ்லிம்சள் சபதம் செய்யவேண்டும். தங்கள் உயிர்களை அர்ப்பணித்தாவது ஹிந்துக்கள் வெளியேறாமல் அமைதியுடனிருக்கும்படிச் செய்யவேண்டும்.

முஸ்லிமல்லாதார் அவதியுறும் ஒருநாட்டிலுள்ள முஸ்லிம்கள் மீது மறுநாள் சூரியன் உதிப்பதும், தண்ணீரால் அவர்களுடைய தாகம் அடங்குவதும், ஆகாரத்தால் அவர்களுடைய பசிதணிவதும் ஆச்சரியமல்லவா? இதுவும் ஒரு வாழ்க்கையா? ஜனங்கள் வீடுவாசல்களைவிட்டு வெளியேறும் நாட்டின் சர்க்காரும் ஒரு சர்க்காரா? மக்கள் கஷ்டப்படும் போது கவலையற்று இருப்பவர்கள்தான் முஸ்லிம்களா? மனித ஒழுக்கமென்பது இதுதானா? நேர்மையுள்ளவர்கள் இப்படித்தான் நடந்து கொள்வார்களா? இஸ்லாமின் சர்வதேசியத் தன்மைக்கு இதுதான் எடுத்துக்காட்டா?

ஆயிரம் முஸ்லிம்கள் அழிவதாயிருந்தாலும் அண்டையில் வசிக்தும் முஸ்லிமல்லாத சகோதரனைப் பாதுகாப்பதே இஸ்லாம். தாங்கள் வீடுகளை இழக்க வேண்டிவரினும் அவனை நிம்மதியுடன் வீட்டிலிருக்க செய்பவர்கள்தான் முஸ்லிம்கள். அசட்டு பாகிஸ்தான் அதை உணருமா?

இவ்வித செய்திகளை இந்திய முஸல்மான்களால் சகிக்க முடியாதிருக்கையில் கண்ணெதிரே வெளியேறும் ஹிந்துக்களைப் பார்த்துக்கொண்டு கிழக்குபாகிஸ்தான் முஸ்லிம்கள் பேசாமல்தானிருக்கின்றனர். இஸ்லாமுக்குப் புரம்பான வாழ்வைக்காட்டிலும் இஸ்லாமிய கௌரவத்தை உயர்த்துவதற்கு மனிதர்களைப் போல் நடந்து, மடிவது ஆயிரமடங்கு வரவேற்கத் தகுந்தவிஷயம்.

நாலரைகோடி முஸ்லிம்களைக் குறித்து பாகிஸ்தானிகள் அனுதாபம் காட்டுகின்றனர். தங்களிடமுள்ள முஸ்லிமல்லாதாரை திருப்தி செய்யாமல் இங்குள்ள முஸ்லிம்களுக்கு சேவைசெய்ய முடியாதென்பதை அவர்கள் உணரவேண்டும். மூஸ்லிமல்லாதாரை நேர்மையாகநடத்தி அவர்களுடைய உயிர், உடைமை, கௌரவம், மதம், கலாசாரத்தைப் பாதுகாப்பதைத் தவிர இந்திய முஸல்மான்களுக்கு சேவைசெய்ய பாகிஸ்தானுக்கு வேறுவழியில்லை. அப்படிச்செய்ய முடியாதென்றால் பாகிஸ்தானே இந்திய முஸல்மான்களின் கொலையாளி. நம்மை உயிருடன் புதைக்கவே பாகிஸ்தான் சபதம் செய்திருக்கிறது.

இஸ்லாமிய ஆட்சிக்குபயந்து யாரும் வெளியேற மாட்டார்களென்பதே நம்முடிவு. முஸ்லிமல்லாதார் வெளியேறுவதற்கு இந்தியா பாகிஸ்தானிடையே யுத்தமென்ற பிரசாரமோ அல்லது மெஜாரிடியின் ஒழுக்கமற்ற நடத்தையோதான் காரணமாயிருக்கவேண்டும். எதுவாக இருப்பினும் வெளியேறுவதற்குள்ள காரணங்கள் உடனடியாக போக்கப்பட வேண்டியதவசியம்.

ஆலங்குடி.

17—10—48

இன்று இரவு 6-30 மணிக்கு ஜனப், M. S. ஜமால் முகம்மது B. A. ஸ்ரீ, வல்லத்தரசு வாசகசாலையை திறந்து வைத்தார். ஜனப் M. S அப்துல் வஹாப் B. A. கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தோழர்கள், மு. நடராஜன், துரைராஜ், முதலியவர்கள் வல்லத்தரசின் அரும் பெரும் தியாகத்தை குறித்தும் வாசகசாலையின் அவசியம் குறித்தும் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குபின்னர் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவடைந்தது. நடராஜன்.

○ ○ ○

திருக்கோவலூர் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி.

நாளது 17—10—48-ல் உளுந்தூர்பேட்டை பிர்க்கா காங்கிரஸ் கமிட்டி தேர்தல் கூட்டம் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி தலைவர், S. A. M. அண்ணாமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏகமனதாக 15 மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஸ்ரீ, R சந்திரசேகர நயினர், ராய. பொன்னுசாமி உடயார், S ராஜகோபால், T. ரத்தின உடயார், S. ராமகிருஷ்ண நாயுடு முறையே தலைவர், உபதலைவர், காரியதரிசி, உபகாரியதரிசி, பொக்கிஷதார்களாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர் தா. கா. கமிட்டி காரியதரிசி R. நடராஜன் வந்தனோபசாரம் கூறினர், தேர்தல் கூட்டம் இனிது முடிந்தது.

காரியதரிசி, R. நடராஜன்.

நச்சாந்துபட்டி.

20—10—48.

இவ்வூர் பஞ்சாயத்துபோர்டுக்கு திரு. முரு இராமநாதன் பிரஸிடெண்டாகவும், திரு, ரா. அ. சிவத்தியாபிள்ளை 1. திரு, வெ. ந வெ. சிதம்பரம் முதலியார், 2. திரு, S. ராமசாமி ஐயர் (கர்னம் கோட்டூர்) 3. நியமன மெம்பர்களாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

○ ○ ○

துவரங்குரிச்சி கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம்.

கும்பகோணம், 23—10—1948

நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ C. சாமிநாத செட்டியார் தொகுதி சட்டசபை பிரதிநிதி அம்மாபேட்டை ஸ்ரீ P, வெங்கட்ராமய்யரிடமிருந்து 22—10—48ல் வந்த தபாலில் கும்பகோணம் நகர சப்ளைக்காக 80 பேல் அனுப்பப்பட்டுவிட்டதென்றும் இனி தடையில்லாமல் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்குமென்றும் கனம் தொழில் மந்திரி சீதாராம ரெட்டியார் உறுதி கூறினரென்றும் அறிவிக்கப்பட்டது. ஆகையால் நம் சங்கத்தலைவர் ஸ்ரீ T. R குப்புசாமி, நகர காரியதரிசி ஸ்ரீ C. சாமிநாத செட்டியார், மாகாண சௌராஷ்ட்ர தேசிய வாலிபர் சங் சங்கத்தலைவர் தஞ்சை ஸ்ரீ S. V, கிருஷ்ணசாமி பாகவதர் மற்றும் பல காங்கிரஸ் ஊழியர்கள் முன்னிலையில் 22—10—48 மாலை 4½-மணிக்கு உண்ணாவிரதம் முடித்துக் கொண்டார்.

இப்படிக்கு

K நன்னப்பன், காரியதரிசி.

"ஆஸாத்"

(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

உங்கள் ஊர் ஏஜெண்டிடம் கேளுங்கள், உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசியக் கடமை. "ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ 6/- (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

காஷ்மீரில் பெரும் போருக்கு ஆயத்தம்!

கில்கிட் முதல் ஜம்மு வரை மர்ம விமானங்கள்!

காஷ்மீரின் எல்லாப் போர்முனைகளிலும் பெருத்த அளவில் யுத்தம் மூளுமென்று புதுடில்லி ராணுவ தலைமை காரியாலயத்தில் எதிர்பார்க்கப்படுகிறது எல்லா போர்முனைகளிலும் நவீன யுத்த சாதனங்களுடன்கூடிய பாகிஸ்தான் படைகள் பெரிய எண்ணிக்கையில் குவிகின்றன. காஷ்மீர் பள்ளத்தாக்கில் பாகிஸ்தான் படைகள் இறுதிப்போருக்கான பலத்த ஏற்பாடுகள் செய்வதாகத் தெரிகிறது. குளிர்கால ஆரம்பத்தில் ஜம்மு பிரதேசத்திலும் யுத்தத்தீ மூளக்கூடும். பூஞ்ச் பிரதேசத்தில் எதிரிகள் பலத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். பெரிய எண்ணிக்கையில் விமானங்கள் திரட்டப்படுகின்றன.

பாகிஸ்தான் அரசாங்கம் போலிகாஷ்மீர் அரசாங்கத்தை அங்கீகரிக்க ஏற்பாடு செய்து வருவதாகவும் தெரிய வருகிறது. பிறகு பாகிஸ்தானில் சேரவிரும்புவதாக விண்ணப்பித்துக் கொள்வதற்கு போலி அரசாங்கம் தூண்டப்படும். பாகிஸ்தான் அரசாங்கம் அதை ஏற்று காஷ்மீரை பாகிஸ்தானின் அங்கமென்று தீர்மானிக்கும்.

தாக்குதல் முன்னெச்சரிக்கை.

பாகிஸ்தான் படைகள் பெருத்த அளவில் தித்வால் பிரதேசத்தை தாக்கிய அக்டோபர் 12-ந் தேதி தான் காஷ்மீரின் பல்வேறு போர் முனைகள் உள்பட பாகிஸ்தான் காஷ்மீர்பள்ளத்தாக்கைசுற்றி அரைவட்டரூபத்தில் பலமான வளையம் அமைப்பது தெரியவந்தது.

தித்வால் பிரதேசத்தை திரும்பவும் ஆக்கிரமிக்க பிரிகேடியர் ஷேர்கான் தலைமையில் பாகிஸ்தான் படைகளும் பலூஜாதியினரும் முழுவேகத்துடன் தாக்கினர். தயாராக இருந்த இந்தியப்படைகள் எதிரிகளை முறியடித்தனர்.

எதிரிகளின் பலமான பீரங்கிப்பிரயோகம், மார்டர் பாம்கள், வர்ணப்புகை குண்டுகளின் பிரயோகத்தால் பாகிஸ்தான் படைகள் பலத்த ஏற்பாடுகள் செய்திருப்பது வெளியாகிறது. போனவருஷத்தைப்போல் கொரில்லா போருக்கும், பெருந்தாக்குதலுக்கும் பாகிஸ்தான் ஏற்பாடு செய்கிறது. அதில் நவீன யுத்த சாதனங்கள் உபயோகிக்கப்படலாம். காஷ்மீர், ஜம்மு பிரதேசத்தைத்தவிர, முழுவதையும் பாகிஸ்தானில் சேர்க்க இறுதிப் போருக்கான ஆயத்தம் நடந்து வருகிறது.

மர்ம விமானங்கள்.

கில்கிட்டிலிருந்து ஜம்மு காஷ்மீர் எல்லைகளுள்பட பாகிஸ்தான் விமானப்படை நடவடிக்கைக்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. சென்ற யுத்த முடிவில் ஜப்பானியர்களுக்கு எதிராக உபயோகிக்கப்பட்ட இருநூறு ஸ்பிட்பயர் விமானங்களை பிரிட்டிஷ் விமானப்படை அப்படியே விட்டுச் சென்றிருந்தது.

அவை யோரி பூரிலும், கராச்சியிலுமிருந்தன. பிரிவினைக்குப்பிறகு பாகிஸ்தான் கையில் அகப்பட்டன பிரிட்டிஷார் கொடுத்துதவிய நிபுணர்களின் உதவியைக் கொண்டு பாகிஸ்தான் அவற்றை ரிப்பேர் செய்துகொண்டிருக்கிறது. கராச்சியிலிருந்து அவை ரகசியமாக மறைந்திருக்கின்றன. பாகிஸ்தான் விமான தளங்களான கித்வர், சிக்லாலா, ராஸல்பூர், பெஷாவர், கோஹாட் முதலிய இதர தளங்களிலும் அவை தென்படவில்லை. இந்த விமானங்களை காஷ்மீர் எல்லைக்கு ஒட்டியிருக்கும் ஐந்து விமான தளங்களில் போய்ச் சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. காஷ்மீர் எல்லையில் யுத்த விமானங்கள் திரட்டப்படுவதன் நோக்கம் வெளிப்படையானது

இதற்கிடையே பாகிஸ்தான் ராணுவ இஞ்சினீயர்களும் நிபுணர்களும் எல்லைமாகாண இஞ்சினீயருமான டி. எம். பீர்ஜாதாவுடன் கில்கிட் போயிருக்கின்றனர். இவர்கள் டிகோலாவிலுள்ள தளங்களை விமானங்கள் இறங்குவதற்கு ஏற்றதாகச் செய்வர் இதனால் குளிர்காலத்தில்தரைமார்க்கம் தடைப்பட்டாலும் லத்தாக் முதலிய இடங்களில் போராடும் பாகிஸ்தான் ராணுவத்தினருக்கு உதவியும் சப்ளைகளும் அளிப்பது சாத்தியமாக இருக்கும்.

இந்திய விமானதளங்களின் தொடர்ந்த தாக்குதலுக்கிடையே கில்கிட் விமான தளங்கள் கிட்டத்தட்ட தயாராய்விட்டது. பிரிட்டிஷ் கமாண்டர் மேஜர் ஜெனரல் பூங்கிட் தலைமையில் சித்ரால் படையின் ஒரு கோஷ்டி கில்கிட் பகுதியில் பாகிஸ்தான் படைகளுடன் வந்து சேர்ந்திருக்கிறது இந்த இடம் ஜோஜீலா, லத்தாக், பகுதியில் போராடும் பாகிஸ்தான் படைகளுக்கு பின்புறத்திலிருக்கும் தளமாகும்.

அரசியல் அறிவு வளர்ச்சி அடைய

"ஆஸாத்"

அவசியம் படிக்கவேண்டும்.

சமூக வாழ்வு.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்தக் கலியாணக் கூட்டம் பொதுவாக பெண் வீட்டிலிருந்து ஒரு நாள் தாமதித்துப் பிறகு புறப்படும். இரண்டாவதாக மணமகன் மண்டபத்திற்கிட்டுச் செல்லப்படுவான். பெண்களாகக் கூடிச்சில சடங்குகள் செய்வார்கள். அதற்கு மத விசேஷமொன்றுங் கிடையாது; வெறும் வழக்கம். இச்சடங்கு இடத்திற்கிடம் மாறுபடும். ஹிந்துக்களில் மணமகன் மஞ்சள் நீராட்டப்படுவான் இதற்கு சன்மானம் கொடுத்தாலன்றி இணங்கமாட்டான். இதற்கு உபதான் என்று பெயர். மாலையில் பெண்கள் அவனை மணமகளின் அறைக்கு இட்டுச்சென்று கோஹ்பார் என்ற சடங்கைச் செய்வார்கள் கலியாணக் கூட்டத்தினர் யாவரும் புறப்படுமுன் முஹ்றதேகிச் சடங்கு நடைபெறும். மணமக்கள் ஒருங்கே அமர்ந்திருக்க மணமகன் வீட்டார் மணப்பெண்ணின் முகத்தை அப்பொழுதுதான் பார்ப்பார்கள்; அன்பளிப்புகளும் செய்வர்; கடைசியில் பிதாய் அல்லது விடை பெற்றுச் செல்லுதல். இடையில் மாப்பிள்ளை வீட்டாருக்கு உணவேற்பாடு செய்வது பெண் வீட்டார். முஸல்மான்களிடையேயும் மணமகன் மண்டவத்திற்கு இட்டுச்செல்லப்படுகிறான், அப்பொழுது ருனுமாய்ச் சடங்கு அதாவது மாப்பிள்ளையும் பெண்ணும் ஒருவரையொருவர் கண்ணாடிகளில் பார்த்துக்கொள்வர். மாப்பிள்ளை வீட்டுக்கு மணமக்கள் போகும்போது மாப்பிள்ளைக்கு சீர் செய்வது ஹிந்து முஸ்லிம் இருபாலாரின் வழக்கம். இப்பொருள்கள் பெரும்பாலும் வீட்டுக்குரிய பண்ட பாத்திரங்கள், படுக்கைகள் பெண் ஏறிச்செல்லுவதற்குப் பல்லக்கு முதலியனவாகும். ஹிந்துக்களிடையே அநேகமாய் ஒரு பசுவைக்கொடுப்பார்கள் நிதி மிகுந்தவர்கள், குதிரையோ, யானையோ அல்லது தற்காலத்தில் ஒரு மோட்டார்காரோ சீர் செய்வார்கள்

முஸ்லிம்களுக்குள், பெண் வந்த உடன் நேராக மாப்பிள்ளையின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவதில்லை இடையில் தர்கா போன்ற ஓர் இடத்தில் நிறுத்தி மணமகன் வீட்டுப் பெண்கள் தண்ணீரும் மாஞ்சுள்ளியும் கொண்டுவந்து சில சடங்குகளைச் செய்வார்கள். மணமகன் வீட்டிற்கு வந்ததும் அவனுடைய சகோதரி அவர்களை உள் நுழையவிடாது தடுத்து அவனுக்குவெகுமதி கொடுத்தாலன்றி விடமாட்டாள். ஹிந்துக்களில், இம்மாதிரி தடுப்பதை நிறுத்த சகோதரியின் கணவனுக்கு நன்கொடை செய்யப்படுகிறது. பையனும் பெண்ணும் காளியாஸ்தானுக்கோ அல்லது ஒரு கோயிலுக்கோ அழைத்துச் செல்லப்படுவர்.

இவ்விதமாகஹிந்து முஸ்லிம்களுக்கிடையேநடைபெறும் சடங்குகள், அனுஷ்டானங்கள் அநேகமாக ஒன்றுபோலவே இருக்கும் இஸ்லாம் இவைகளை விதிக்காதபோதே இவ்வாறு இருக்கிறது. மத நூல் விதி பிறழாத தூய முஸல்மான்களுக்கு இவைகளெல்லாம் மதவிரோதமாகக்கூடத் தென்படக்கூடும்,

யாவரும் பொதுவாக அறிந்துள்ளபடி ஹிந்து மதம் விவாகப் பிரிவினையை அனுமதிக்கவில்லை. இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் அப்படியே ஆகவே மறுமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இஸ்லாம் இம்மாதிரியொன்றும் வைத்துக் கொள்ளவில்லை. விதவை மணத்திற்கு நபிகளின் அனுமதியே இருக்கிறது. அவரே விதவைகளை மணம் புரிந்தவர். இருப்பினும் ஹிந்துக்களின் பழக்கங்களும் சூழ்நிலையும் முஸ்லிம்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறதென்றால், வடநாட்டிலுள்ள முஸ்லிம் உயர் குடும்பங்களில் சமூக முறைமையாகவோ, மத நெறியாகவோ விதவை மணம் விலக்கப்படாவிட்டாலும், அது சிலாக்கியமானதாகக் கருதப்படவில்லை,

ஹிந்து முஸ்லிம் முக்கிய ஈமச்சடங்குகளைத் தங்களுடைய மத நெறிப் பிரகாரம் செய்கிறார்கள். முஸ்லிம்கள், புதைப்பதற்கு முன் தொழுகிறார்கள்; பின்பும் தொழுகிறார்கள்; மூன்றாவது அல்லது நான்காவது நாளிலும், மறுபடி பத்தாவது, நாற்பதாவது நாளிலும் இறந்த ஆன்மாவின் நலத்திற்காக ஏழைகளுக்கு உணவளிக்கிறார்கள் சாவுக்குப் பின், குறிப்பிட்ட தேதிகளில் இவ்வாறு அனுஷ்டிப்பது இஸ்லாமில் ஏற்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர்களின் செயல்கள் ஹிந்துக்களின் செயல்களைப் போலவே இருக்கின்றன ஹிந்துக்கள் இரண்டு, ஏழு, பத்து, பன்னிரண்டு, பதின்மூன்று அல்லது முப்பதாவது நாளில் இறந்த ஆன்மாவுக்கு நீரும் பிண்டமும் அளித்துவிட்டு ஏழைகளுக்கு உணவிடுகின்றனர்; இரப்பவர்க்குப் பிச்சையிடுகின்றனர்

ஜாதி வித்தியாசமும் இந்திய முஸல்மான்களைப் பாதிககாமல் இருக்கவில்லை. முஸல்மான்களிடையே ஜாதிகளைக் குறிக்கும் சொற்கள் ஏராளமாக இருக்கின்றன சையது, ஷேக், பட்டாணி, மாலிக், மோமீன், மன்சூர், ராயீன், காசாப் ராகி, ஹஜ்ஜாம், தோபி என்பன. அவைகளிற்சில; சில பெயர்கள் தொழிலைக் குறிப்பன; சில, பாம்பரைப் பெயர்கள் ஒரு பிரிவினருக்கும் இதர பிரிவினருக்கும் கொள்வன கொடுப்பன சமூக முறையாக அல்லது மதவிஷயமாக

தடுக்கப்படாவிட்டாலும் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்குள்ளேயே சம்பந்தம் அடிக்கடி நடக்கும். அதற்கு மேலாக மற்றொன்று, ஹிந்துக்களிடையே உள்ள பல்வேறு ஜாதியார்களுக்குள்ளும் காணப்படும் ஒட்டாத்தன்மையையும், தெளிவாகச் சொல்ல முடியாத ஒரு வேறுபாட்டுணர்ச்சியையும் இவர்களும் குறிப்பிடத்தக்க அளவில் பெற்றிருக்கிறார்கள் என்பது இவர்களிடையே மிக நெருங்கிப் பழகுவோர்க்குப் புலனாகும். முஸ்லிம் சமூகத்தில் உள்ள முஸ்லிம் பங்கிக்கு ஹிந்துக்களிடைத் தீண்டாதாருக்குள்ள அந்தஸ்தைக் காட்டிலும் அதிகமாக ஒன்றும் இல்லையென்பதைக் குறித்தால் மாத்திரம் போதுமானது. இஸ்லாம் இவைகளிலெதையும் அனுமதிக்கவில்லை. எனினும் அது சூழ்நிலையின் வேலையாம். அதை இந்திய முஸ்லிம்கள் எதிர்க்க முடியவில்லை.

ஹிந்துக்களிலிருந்து ஏராளமாக முஸ்லிமாக மாற்றப்பட்டவர்கள் தங்களுடன் ஹிந்து மதப் பழக்க வழக்கங்களைக் கொண்டு சென்றார்களென்பதும், நெடுங்காலமாகியும் அவைகளை விடாமல் கடைப்பிடிக்கிறார்களென்பதும், இது சம்பந்தமாகக் குறிப்பிடவேண்டிய அவசியமாகும். மால்கான ரஜபுத்திரர்களைப் பற்றி மாத்திரம் இங்குக் குறிப்பிட்டால் போதுமானது. இருபது வருஷத்திற்கு முன்னால் இவர்களை மறுபடியும் ஹிந்துக்களாக மாற்ற வீணாக முயற்சி செய்யப்பட்டது. இதனால் மிகவும் வெறுப்பு ஏற்பட்டதேயொழிய வேறொன்றுமில்லை. ஹிந்துக்களாக இருந்த காலத்தில் அனுஷ்டித்த ஆசாரங்களையும் சடங்குகளையும் இவர்கள் இன்னும் அனுஷ்டிக்கிறார்கள். இதைப் போன்று பழக்க வழக்கங்களைக் கைவிடாத அநேக கூட்டத்தார்கள் சந்தேகமில்லாமல் இருக்கிறார்கள்.

இஸ்லாம் பிரத்தியேக தாயபாக விதிகளைக்கொண்டிருந்தாலும் முஸ்லிம் வகுப்பாரில் அநேக கூட்டத்தார் சமீபகாலம் வரையும் முஸ்லிம்களாக மாறுவதற்கு முன் அனுசரித்த தாயபாகச் சட்டங்களையே அனுசரித்து வந்தார்கள். சிந்து, குஜராத், பம்பாய் முதலிய இடங்களிலுள்ள கோஜாக்கள், கச்சி மெமான்கள், போஹராக்கள், பணம் படைத்த முஸ்லிம் வகுப்பார். இவர்கள் இந்தியாவின் மற்றப் பாகங்களில் மட்டுமின்றித் தெற்கு, கிழக்கு, ஆப்பிரிக்கா, அரேபியா, பாரசீகம், மலேயா முதலிய நாடுகளிலும் வியாபாரமும் தொழிலும் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் அநேகர் 1937-வரையும் ஹிந்துப் பழக்க வழக்கங்களை மட்டுமின்றி ஹிந்து தாயபாகச் சட்டத்தையும் அனுசரித்து வந்தார்கள். அதைப் போன்றே பலுச்சிகளும் சில பஞ்சாபியரும் தங்களுடைய சொந்தப் பழக்க வழக்கங்களை அனுசரித்து வந்தனர்.

மாப்பிள்ளைமார்களைத் மருமக்கத்தாயப் முறை கட்டுப்படுத்திவந்தது. சட்டத்திற்கு விரோதமான பழக்க வழக்கங்களிலிருப்பினும், ஷா.ரியத் எல்லா முஸல்மான்களுக்கும் செல்லுபடியானது என்று ஒரு சட்டம் 1937-ல்தான் இயற்றப்பட்டது.

சந்தேகமில்லாமல் ஹிந்துக்கள் முஸல்மான்களோடு உடனமர்ந்துண்ண எப்பொழுதும் மறுத்து வந்திருக்கிறார்கள் இன்றுவரை இந்தத்தடை ஹிந்து முஸ்லிம்களுக்கிடை மட்டும்தான் இருந்துவருகிறது என்று சொல்வதற்கில்லை; ஹிந்து ஜாதிகளில் பெரும் பிரிவுகளுக்குள்ளும் உட்பிரிவுகளுக்குள்ளும் இருந்துதான் வருகிறது; இவ்விதமாக ஒரு பிராமணர் ஒரு ரஜபுத்திரனோடு உண்பதில்லை ஒரு ரஜபுத்திரன் ஒரு பனியா அல்லது ஒரு காயஸ்தனோடு உண்பதில்லை. பிராமணர்களுக்குள்ளும் சாகத்வி பிராமணன் சார்ஜுபரி பிராமணனோடு உண்பதில்லை. தென்னாட்டுப் பிராமணன், வங்காள அல்லது மைதிலிப் பிராமணன் இவர்களுக்குள் சமபந்திச் சாப்பாடு கிடையாது. உறவினராயிருந்தாலொழிய சார்ஜுபரி பிராமணர்கள் தங்களவரோடு உண்பதில்லை. ஸ்ரீவாஸ்தவா காயஸ்தன், அம்பாஸ்தன் அல்லது கர்ண காயஸ்தனோடு உண்பதில்லை. ஹிந்துவல்லாதவன் இந்தத் தடை விதிகளை நுணுகி ஆராயப் புகுந்தால் கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்டதுபோல் திகைப்பான். ஒரு ஜாதிக்கும் இன்னொரு ஜாதிக்கும் இடையில் மாத்திரம் இவ்வித்தியாசங்கள் இல்லை; உட்பிரிவுகளுக்குள் மாத்திரமும் இல்லை; அதற்கப்பால் உணவு வகைக்கும், சமைக்கப்படுகிற விதத்துக்கும் கூட எட்டிப் போகிறது பீஹாரில் சுடப்பட்டிருந்தால் சாப்பிடக் கூடாது. நெய்யில் பொரிக்கப்பட்டிருந்தால் அயல் ஜாதிக்காரர்களிடமிருந்தும் உண்ணலாம் ஆனால், வங்காளத்தில் அப்படியில்லை. சில காய் கறிகளை உப்புப் போடாமல் சமைத்திருந்தால் உண்ணலாம். உப்புப் போட்டிருந்தால் உண்ணக்கூடாது. இந்த வேறுபாடுகள் மாகாணத்துக்கு மாகாணம், ஜாதிக்கு ஜாதி, பொருளுக்கு பொருள் வித்தியாசப்படுகிறது. இந்த ஜாதி முறையிலே பிறந்து வளர்ந்த ஒருவருக்குத் தவிர மற்றவர்களுக்கு இது ஏன்? எதற்கு? என்பதொன்றும் புரியாது. ஒரு காயஸ்தன் தொட்ட உணவை ரஜபுத்திரன் மறுத்தால் அல்லது ரஜபுத்திரன் தொட்ட உணவைக் காயஸ்தன் மறுத்தால், உணவளித்தவன் மனம் வருந்துவதோ அவமானப் படுத்தப்பட்டதாக நினைப்பதோ கிடையாது என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதைச் சகஜமாகக் கருதுகிறார்கள். இதில் தாழ்வோ அவமானமோ ஒன்றும் நினைத்துக்கொள்வதில்லை.

"இந்தியா பிரிக்கப்பட்டால்"
(பாபூ ராஜேந்திரபிரசாத்)

நமது ஏஜண்டுகள்:—

G. R. V. கிருஷ்ணன்,
நியூஸ் ஏஜண்ட்,
போளூர்.

G. ரபீகுத்தீன்,
பெரியதெரு,
நெல்லிக்குப்பம்

WHOLE CEYLON AGENCY
FOR
"AZAD"
EMMEL & Co.,
General Merchants & Commission Agents,
GAMPOLA, (CEYLON)

P. S முகம்மது மைதீன் சாகிப்,
ஷம்ஸுல்ஹுதா முஸ்லிம் சங்கம்,
அல்லிமுப்பன் தெரு, கடையநல்லூர்

M. S. M. கனி,
மரம், ஓடு வியாபாரம்,
கோபிசெட்டிப்பாளையம்.

ரா கணபதி,
C/o M S. முனிசாமி,
ஈஸ்வரய்யர் சந்து,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

எஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
''ஆஸாத்'' விற்பனை செய்ய
ஏஜெண்டுகள் தேவை.

S சம்பந்தம்,
நியூஸ் ஏஜண்ட், காட்டுமன்னார்குடி,

M. நாராயணன் நாயர்,
நியூஸ் ஏஜண்ட், : புதுக்கோட்டை.

G, சுப்பையா பிள்ளை,
நாச்சியார்கோவில்,

E. V. K. மீரான் சாஹிப்,
சத்திர தெரு, கல்லிடைக்குறிச்சி

முகம்மது சாலிஹ் சாஹிப்,
சாலிஹ் & ஸன்ஸ்,
எடத் தெரு, நாகப்பட்டிணம்

P. K. E. ABDULLA,
News and Commission Agent,
" LATEEF BUILDINGS "
— VALANGAMAN (S. I.) —

பீ. மீரா மொய்தீன் சாகிப்,
ரெங்கோன் ஹால், காரைக்குடி.

S. S. முகம்மது இப்ராஹிம் மரைக்காயர்,
" ஆஸாத் ஸ்டோர் "
கடைத்தெரு, அதிராம்பட்டணம்

G. அப்துல் லத்தீப்,
மணியக்காரத்தெரு, திருச்சி.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St , Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.